


**26.02.2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. தமிழகத்திற்கு கடந்த 10 ஆண்டுகளில் 5 லட்சத்து 8 ஆயிரத்து 337 கோடி ரூபாய் நிதியை மத்திய அரசு வழங்கியுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.

2. மஹா சிவராத்திரி நாடுமுழுவதும் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

3. தமிழகத்தின் மருத்துவ கட்டமைப்பை சர்வதேச தரத்திற்கு மேம்படுத்தும் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்படுவதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. கரூர் அருகே குளித்தலையில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் 5 பேர் உயிரிழந்தனர்.

5. துபாய் ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் ரோஹன் போபன்னா, **Ivan** இணை - இங்கிலாந்து இணையை இன்று எதிர்கொள்கிறது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

**********

<u>அமித்ஷா</u>

தமிழகத்திற்கு திரு. நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு கடந்த 10 ஆண்டுகளில் 5 லட்சத்து 8 ஆயிரத்து 337 கோடி ரூபாய் நிதி வழங்கியிருப்பதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.

கோவை பீளமேட்டில் பாரதிய ஜனதா கட்சியின் புதிய அலுவலகத்தை திறந்துவைத்து பேசிய அவர் இது தவிர கட்டமைப்பு மேம்பாட்டிற்காக ஒரு லட்சத்து 43 ஆயிரம் கோடி ரூபாயை மோடி அரசு தமிழக அரசுக்கு வழங்கியிருப்பதாக குறிப்பிட்டார்.

இருப்பினும் தமிழகத்திற்கு அநீதி இழைக்கப்பட்டதாக முதலமைச்சர் தெரிவிப்பதாக அவர் குறை கூறினார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் காணொலி மூலம் ராமநாதபுரம் திருவண்ணாமலை மாவட்டங்களிலும் பிஜேபி அலுவலகத்தை திறந்துவைத்தார்.

பிஜேபி தேசிய மகளிர் அணி தலைவர் திருமதி வானதி ஸ்ரீனிவாசன், டாக்டர் தமிழிசை சௌந்தர்ராஜன் உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ளனர்.

கட்சி நிர்வாகிகள் உடனான ஆலோசனை கூட்டத்திலும் திரு.அமித்ஷா இன்று கோவையில் பங்கேற்கிறார்.

கோவை வெள்ளியங்கிரி ஈஷா மையத்தில் நடைபெறும் மஹா சிவராத்திரி விழாவிலும் அவர் கலந்துகொள்கிறார்.

**********

<u>மஹா சிவராத்திரி</u>

மஹா சிவராத்திரி நாடுமுழுவதும் இன்று பக்தி சிரத்தையுடன் கொண்டாடப்படுகிறது.

இந்நாளை ஒட்டி குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள செய்தியில் வளர்ச்சி அடைந்த நாடாக நம் தேசம் முன்னேற இறையருள் கிட்ட வாழ்த்தியுள்ளார்.

இந்நன்நாளில் நாட்டு மக்கள் மகிழ்ச்சி வளம் நலத்துடன் வாழவும், வளர்ந்த இந்தியாவாக நம் நாடு வலுப்பெறவும் பிரதமர் திரு.நரேந்திரமோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தமிழக ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி விடுத்துள்ள செய்தியில் இந்நன்நாள் மக்களிடையே ஆன்மீக ஒற்றுமையையும், நல்லிணக்கத்தையும் வளர்க்கட்டும் என கூறியுள்ளார்.

இதனிடையே மாநிலத்தின் அனைத்து சிவாலயங்களிலும் இன்று நான்குகால பூஜைகளுடன் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தின் திருமலை மஹாதேவர் திருக்கோவிலில் நேற்று தொடங்கிய பிரசித்தி பெற்ற சிவாலய ஓட்டம் திருநட்டாலம் சங்கரநாராயண சிவாலயத்தில் இன்றுமாலை நிறைவடைகிறது.

ராமேஸ்வரம் அருள்மிகு ராமநாதசுவாமி திருக்கோவிலில் மகா சிவராத்திரியை ஒட்டி இன்று திருத்தேரோட்டம் வெகு விமரிசையாக நடைபெற்றது.

இரவு வெள்ளி தேரோட்டம் நடைபெறும்.

**********

<u>கும்பமேளா</u>

இதனிடையே பிரயாக்ராஜில் நடைபெறும் மகா கும்ப விழா இன்று நிறைவடைகிறது.

இதுவரை 65 கோடியே 50 லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் இங்கு புனித நீராடியுள்ளனர்.

144 ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழும் சூரிய குடும்பத்தின் 7 கோள்கள் ஒரே நேர்கோட்டில் தோன்றும் அற்புத நிகழ்வும் இவ்விழாவிற்கு சிறப்பு சேர்த்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இவ்விழாவில் பங்கேற்ற பக்தர்கள் தத்தம் இடங்களுக்கு திரும்பும் வகையில் பிரயாக்ராஜிலிருந்து 350 ரயில்கள் இயக்கப்படுகின்றன.

பிரசார்பாரதியின் தலைவர் நவ்னீத் ஷேகல் தனது செய்தியில் நாட்டு மக்களின் கலாச்சார இணைப்பில் ஆகாஷவாணி முக்கிய பங்காற்றிருப்பதாக குறிப்பிட்டார்.

ஆகாஷ்வாணியின் தலைமை இயக்குனர் டாக்டர் பிரக்யால் பாலிவல் கவுர் விடுத்துள்ள செய்தியில் கும்பமேளா விழாவை ஆகாஷ்வாணியின் கும்வாணி அலைவரிசை வெற்றிகரமாக முன்னெடுத்து சென்று ஏராளமான மக்களை சென்றடைந்தது குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார்.

**********

<u>சோமன்னா</u>

பாம்பன் ரயில்பாலப்பணிகள் முழுமையாக நிறைவடைந்துள்ள நிலையில் அது விரைவில் திறக்கப்படும் என்று மத்திய ரயில்வே இணை அமைச்சர் திரு.சோமன்னா தெரிவித்துள்ளார்.

திருச்சி விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் பிரயாக்ராஜ் கும்பமேளாவிற்கு ரயிலில் சென்ற பக்தர்கள் எவ்வித சிரமத்தையும் அனுபவிக்கவில்லை என்றார்.

மக்கள் அனைவரும் கும்பமேளாவிற்கு மகிழ்ச்சியுடன் சென்றுவந்ததாக குறிப்பிட்டார்.

**********

<u>சர்.சி.வி ராமன்</u>

மத்திய இளைஞர் நலன் மற்றும விளையாட்டுத்துறை அமைச்சகம் சார்பில் திருச்சியில் நாளை நடைபெறும் மாபெரும் நடை பயணத்தில் மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா பங்கேற்கிறார்.

தேசிய பள்ளி விளையாட்டு மைதானத்திலிருந்து சர்.சி.வி. ராமன் பிறந்த இடமான திருவானைக்காவல் வரை நான்கு கிலோ மீட்டர் தூரத்திற்கு இந்த நடைபயணம் நடைபெறுகிறது.

தேசிய வளர்ச்சியில் தலைவர்களின் பங்களிப்பை, இளம் தலைமுறையினர் அறிந்துகொள்ளும் வகையில் மத்திய இளைஞர் நலத்துறை சார்பில் நாடுமுழுவதும் நடைபெறும் நிகழ்வுகளின் ஒருபகுதியாக இந்த நடைபயணம் இடம்பெறுகிறது.

**********

ஜெய்சங்கர்

இந்தியாவின் 4ஆவது பெரிய வர்த்தக ஒத்துழைப்பு நாடாக ஆப்பிரிக்கா திகழ்கிறது என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ஜப்பான் - இந்தியா – ஆப்பிரிக்க வர்த்தக கூட்டமைப்பு நிகழ்வில் காணொலி வாயிலாக இன்று உரையாற்றிய அவர் ஆப்பிரிக்காவின் வளர்ச்சி சர்வதேச நிலைத்தன்மைக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் பெரிதும் பயனளிக்கும் என்றார்.

ஆப்பிரிக்க நாடுகளின் விநியோக சங்கிலியை வலுப்படுத்தவும், விரிவுபடுத்தவும் இந்தியாவும் – ஜப்பானும் ஒருங்கிணைந்து செயலாற்ற முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆப்பிரிக்கா உடனான இந்தியாவின் நட்புறவு ஆழமானது என்றும், பரஸ்பர பங்களிப்பு கொண்டது என்றும் அவர் எடுத்துரைத்தார்.

**********

முதலமைச்சர்

தமிழகத்தின் மருத்துவ கட்டமைப்பை சர்வதேச தரத்திற்கு மேம்படுத்தும் நடவடிக்கைகளில் அரசு முனைப்புடன் ஈடுபட்டுள்ளதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை திருவான்மியூரில் 2 ஆயிரத்து 642 உதவி மருத்துவர்களுக்கு பணிநியமன ஆணைகளை இன்று வழங்கி பேசிய அவர், நாட்டின் மருத்துவ தலைநகரமாக தமிழகம் திகழ்வதாக குறிப்பிட்டார்.

மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் மூலம் கோடிக்கணக்கான மக்கள் பயனடைந்திருப்பதாக குறிப்பிட்டார்.

வாய்ஸ்

**********

தொல்திருமாவளவன்

நாடாளுமன்ற தொகுதிகளுக்கான மறுவரையறை மாநிலங்களின் பிரதிநிதித்துவ அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திரு.தொல்திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் மக்கள் சதவிகிதத்தின் அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பு செய்யப்பட்டால் தமிழகம், ஆந்திரம், கர்நாடகம் கேரளம் போன்ற தென்னிந்திய மாநிலங்கள் பாதிக்கப்படும் என்றார்.

**********

## கியானேஷ் குமார்

மதுரை மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் தேர்தல் தொடர்பான பணிகள் குறித்து தலைமை தேர்தல் ஆணையர் திரு.கியானேஷ் குமார் தலைமையில் ஆய்வுக்கூட்டம் இன்று நடைபெற்றது.

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக்,

மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சங்கீதா உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள் இதில் பங்கேற்றனர்.

**********

## மருத்துவ முகாம்

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் தக்கோளத்தில் அமைந்துள்ள கேந்திரிய வித்யாலயா பள்ளியில் தேசிய பேரிடர் மீட்பு படையின் முதுநிலை மருத்துவ அதிகாரி தலைமையில் சிறப்பு மருத்துவ முகாம் இன்று நடைபெற்றது.

மத்திய தொழில் பாதுகாப்பு படை அதிகாரிகள் மருத்துவ கல்லூரி மருத்துவர்கள் இதில் பங்கேற்றனர்.

**********

## பவானிசாகர்

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் பவானி சாகர் அணையின் கரையோர பகுதிகளில் காட்டு யானைகள் நடமாடுவதால் அப்பகுதியில் பொதுமக்கள் செல்லவதை தவிர்க்க வனத்துறை அறிவுறுத்தியுள்ளது.

**********

## இருவரி

அரியலூர் மாவட்டத்தில் நியாயவிலைக்கடைகளில் குடும்ப அட்டைதாரர்களின் கைரேகைகளை பதிவு செய்ய ஆட்சித்தலைவர் திரு.ரத்தினசாமி கேட்டுக்கொண்டுள்ளார்.

தேனி மாவட்டம் ஆன்டிபட்டி வட்டத்தில் உங்களை தேடி உங்கள் ஊரில் திட்ட சிறப்புமுகாம் ஆட்சித்தலைவர் திரு.ரஞ்சித்சிங் தலைமையில் இன்றும் நாளையும் நடைபெறுகிறது.

திருச்சி, கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் நாளை மறுநாள் நடைபெறுகின்றன.

திருவாரூர் மின்பகிர்மான வட்டம் சார்பில் மன்னார்குடி பிற்படுத்தப்பட்டோர் அரசு பள்ளி மாணவர் விடுதியில் மின்பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு பயிற்சி இன்று அளிக்கப்பட்டது.

நெல்லை அம்பாசமுத்திரம் பாப்பான்குளம் பகுதியில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சுகுமார் 9 லட்ச ரூபாய் மதிப்பிலான நல திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.

மத நல்லிணக்கத்தை பின்பற்றும் இக்கிராமத்திற்கு பரிசாக 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையையும் அவர் வழங்கினார்.

**********

<u>விபத்து</u>

கரூர் மாவட்டம் குளித்தலையில் இன்று அதிகாலை அரசு பேருந்தும் காரும் மோதிக்கொண்ட விபத்தில் காரில் பயணம் செய்த கோவையை சேர்ந்த 5 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

அரசு பேருந்து திருப்பூரை நோக்கியும், கார் திருச்சியை நோக்கியும் வந்துகொண்டிருந்த போது இந்த விபத்து நேரிட்டது.

**********

<u>படகு விபத்து</u>

கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் சேரியாமுட்டம் பகுதியில் இருந்து கடலுக்குள் மீன்பிடிக்கசென்ற இரண்டரை கோடி ரூபாய் மதிப்பிலான விசை படகில் பழுது ஏற்பட்டதால் கடலுக்குள் மூழ்கியது.

இதில் சென்ற 10-க்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலில் குதித்து உயிர் தப்பியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

**********

<u>நாகை கப்பல்</u>

நாகை மற்றும் இலங்கை காங்கேசன் துறை இடையிலான கப்பல் போக்குவரத்து நாளை மறுநாள் வரை தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

அலைகள் சீற்றம் காரணமாக இந்நடவடிக்கை என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

**********

<u>கொடைக்கானல்</u>

கொடைக்கானல் மலைபகுதியில் நெகிழி பொருட்களை உபயோகப்படுத்தவும், வாகனங்களில் கொண்டு செல்லவும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சரவணன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

**********

**கோவில்**

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவில் மாசி திருவிழா வரும் 3ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.

விழுப்புரம் மேல்மலையனூர் அருள்மிகு அங்காளம்மன் கோவில் மாசி தேர்திருவிழா வரும் 4ஆம் தேதி நடைபெறுவதை ஒட்டி அன்றைய தினம் மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

**********

**டென்னிஸ்**

துபாய் ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் ரோஹன் போபன்னா, குரேசியாவின் **Ivan** இணை - இங்கிலாந்து இணையை இன்று எதிர்கொள்கிறது.

**********

**கிரிக்கெட்**

ஐ.சி.சி சேம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் லாகூரில் இன்றுபிற்பகல் இரண்டரை மணிக்கு இங்கிலாந்து – ஆப்கானிஸ்தானை எதிர்கொள்கிறது.

இன்றைய போட்டியில் தோல்வியுறும் அணி போட்டியிலிருந்து வெளியேறும்.

**********

**மகளிர் கிரிக்கெட்**

பெங்களூருவில் நடைபெறும் மகளிர் பிரிமியர் லீக் 20-20 கிரிக்கெட் போட்டியில் மும்பை இண்டியன்ஸ் **U.P.** வாரியர்ஸை இன்று இரவு ஏழரை மணிக்கு எதிர்கொள்கிறது.

**********

**கால்பந்து**

**ISL** கால்பந்து போட்டியில் கொல்கத்தாவில் இன்று இரவு ஏழரை மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் ஈஸ்ட் பெங்கால் அணி – ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது